# யாழ் இந்திய துணைத் தூதரகம்
# யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

இந்திய தொழில்நுட்ப பொருளாதார ஒத்துழைப்பு நாள் (ஐடெக் நாள்) 13.11.2019 அன்று யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தினால் யாழ்ப்பாணம் NORTH GATE JETWING விடுதியில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

2. வடமாகாண தலமை செயலாளர் திரு பத்திநாதன் அவர்கள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். இந்திய துணைத் தூதுவர் திரு.ச.பாலச்சந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் ஐடெக் கற்கை நெறியின் முக்கித்துவம் என்பது அறிவினையும் திறன்களையும் பரிமாறிக் கொள்ளுதல் ஆகும். இலங்கை முழுவதும் 402 புலமைப்பரிசில்கள் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டாலும் அதனை வடமகாணத்தில் பயன்படுத்திக் கொள்ளும் அளவு என்பது ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது. ஆகவே ஒவ்வொருவரும் முயற்சிகளை மேற்க்கொண்டு இப் புலமைபரிசில்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் இவ்வருடத்திலிருந்து தனியார் துறையினரும் இக் கற்கை நெறிகளில் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் பெருமளவான விண்ணப்பதாரிகளை வட பகுதியிலிருந்து அனுப்ப யாழ் இந்தியத் துணைத் தூதரகம் தன்னாலான முயற்சிகளை மேற்க்கொள்ள தயாராக உள்ளது ஆகவே எல்லோரும் இக் கற்கை நெறிகளில் பயின்று திறன்களை விருத்தி செய்து கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தினார். அத்துடன் இவ் ஐடெக் கற்கை நெறிகளுக்கான புலமைப் பரிசில்களைத் தவிர இந்திய அரசாங்கத்தினால் பட்டப் படிப்புக்கள், முதுமாணி பட்டங்கள் மற்றும் கலாநிதி பட்டங்களுக்கு என இந்தியாவிற்கு சென்று கல்வி கற்று வருவதற்கு பல்வேறு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன ஆகவே அவற்றையும் எல்லோரும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

3. அதனைத் தொடர்ந்து உரையாற்றிய முதன்மை விருந்தினர் திரு பத்திநாதன் அவர்கள் ஐடெக் கற்கை நெறிகள் என்பது வெறுமனே வகுப்பறை விரிவுரையை மட்டும் கொண்டதல்ல. பல்வேறு செயன்முறைப் பயிற்சிகள் களப் பயணங்கள் திறன் பகிர்வு என பல விடயங்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டிருப்பதால் இக் கற்கைளில் சென்று பயிற்சி பெற்று வருவோரின் திறன் முன்பை விட பலமடங்கு அதிகரித்துள்ளது. ஆகவே கடந்த காலங்களில் வட மாகாணத்தில் இருந்து செல்வோர் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் இனிவரும் காலங்களில் விண்ணப்பிப்பவர் எண்ணிக்கையினை அதிகரிக்க வட மகாண அமைச்சுக்களின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

3. இவ் ஐடெக் கற்கை நெறியில் பயின்ற அலுவலர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களையும் பயன்பாட்டையும் பகிர்ந்து கொண்டனர். குறிப்பாக தனியார் துறையில் இருந்து இவ்வருடம் சென்று கற்று வந்த திரு நந்தறூபன் அவர்கள் அங்கு தான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் மற்றும் திறன்கள் தொடர்பில் விளக்கமளித்ததுடன் ஐடெக்கின் முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேதநாயகன், வடமகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு இளங்கோவன், பல்கலைக்கழக பேராசிரியர்கள், மூத்த அரச அதிகாரிகள், ஐடெக் மற்றும் இந்திய அரசின் புலமைப்பரிசில் பயனாளிகள் என 100ற்கும் மேற்பட்டவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

***